**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No. 641/2022**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-3/PW-3 |
| Name | : தினேஷ் |
| Father/Husband's Name | : ரவி |
| Village | : கூடுவாஞ்சேரி |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 21 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18.10.2024.

**முதல் விசாரணை–**

நான் தற்போது குரோம்பேட்டையிலுள்ள தாகூர் கல்லூரியில் பி.பி.ஏ மூன்றாமாண்டு முடித்துள்ளேன். அ.சா.1 ஆதிலட்சுமி எனது அம்மா, அ.சா.2 ரவி எனது அப்பா. கடந்த 2021 ஆம் ஆண்டு ஒரு நாள் எனது அண்ணன் தினகரனுக்கும் ஆஜர் எதிரிகள் 4 பேருக்கும் இடையே வாய்தகராறு நடந்துள்ளது. அதனைத்தொடர்ந்து 24.06.2021 ஆம் தேதி நாங்கள் புகார் அளித்தோம். கடந்த 17.06.2021 ஆம் தேதி மாலை சுமார் 4 மணிக்கு நானும், எனது அப்பா , அம்மா , பாட்டி ஆகியோர் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் நால்வரும் வீட்டிற்கு வந்து கதவை அடித்து உதைத்து உள்ளே வந்து இரும்பு கம்பியால் டிவி, மற்றும் வீட்டிலுள்ள பொருட்களை ஆஜர் எதிரி சூர்யா உடைத்தார். பாடு, தேவிடியா பையா உங்க அண்ணன் எங்கடா என்று திட்டினார்.

உன் அண்ணன் இல்லனா என்ன நீ இருக்க இல்ல என்று சொல்லி வீட்டிற்கு வெளியே என்னை சூர்யா அவர் வைத்திருந்த கத்தியை திருப்பி பிடித்து எனது தலையில் அடித்தார். விஜயகுமார் என்னை எட்டி உதைத்தார். விஷ்ணு என்னுடைய முகத்தில் கையால் குத்தினார். அதைத் தடுக்க வந்த எனது அம்மாவையும் பாட்டியையும் எதிரி கார்த்திக் தள்ளி விட்டார். எனது அம்மாவும், பாட்டியும் கீழே விழுந்து விட்டார்கள். பிறகு, எதிரிகள் போகும்போது வீட்டை கொளுத்திருவோம் என்றும், எனது அண்ணனை இன்னைக்குள் கிடைத்தால் கொன்று விடுவோம் என்றும் மிரட்டி சென்றார்கள். கூடுவாஞ்சேரியிலுள்ள அரசு மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றார்கள். அங்கு எனக்கு தலையில் தையல் போட்டார்கள். சம்பவம் குறித்து புகார் கொடுக்க பயமாக இருந்ததால் 1 வாரம் கழித்து கொடுக்கப்பட்டது. 2, 3 முறை போலீசார் எங்களது வீட்டிற்கு வந்து என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.